# இந்து மத இணைப்பு விளக்கம்

## 1.இந்து மதம்

### மதம் என்றால் என்ன?

இவ்வுலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் துன்பத்தை வெறுத்து, இன்பத்தை அடைய விரும்புகின்றனர். அவ்வின்பமும் நீடித்து நிலைபெற்று இருக்க வேண்டுமென்பது அவர்களது விருப்பம். மக்கள் அனைவரும் தங்கள் வாழ்நாட்களில், சிறிது காலம் இன்பத்தையும், சிறிது காலம் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்து வருவதை நாம் காண்கிறோம்.

இவ்வாறு உலகப்பொருள்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பம் எனப்படும். உலகப்பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மையுடையனவாதலால் சிற்றின்பமும் என்றும் நிலைபெற்று நில்லாது அழிந்து விடுகிறது. என்றும் நிலைபெற்று நின்று இடையறாது அனுபவிக்கத்தக்க இன்பம் ஒன்று உளது. அவ்வின்பம் பேரின்பம் எனப்படும். இப்பேரின்பத்தை மக்கள் அனுபவிக்கப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்த வழியே மதமாகும்.

### மதப் பெயர்க் காரணம்:

சில மதங்கள் அம்மதத்தினர் வழிபட்டு வரும் கடவுள் பெயரால் அமைந்துள்ளன.

உதாரணம்: சைவம், வைணவம் முதலியன.

வேறு சில மதங்கள் அதனை நிறுவியவர் பெயரால் அமைந்துள்ளன.

உதாரணம்: பௌத்தம், ஜைனம் முதலியன.

சில மதங்கள் அம்மதத்திற்குரிய தலைசிறந்த நூலின் பெயரால் அமைந்துள்ளன.

உதாரணம்: வேதாந்தம், ஸ்மார்தம் முதலியன.

### இந்து மதம் என்பதன் பொருள்

ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களை “சிந்துக்கள்” அல்லது “இந்துக்கள்” எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர் என்றும், அந்த சிந்துக்களுடைய மதமே இந்துமதம் என ஆயிற்று என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாரும் உளர்.

ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. ஆதலால், இதன் உண்மைப் பொருளை அறிய வேண்டுவது அவசியமாயிற்று.

இந்து மதம் எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம் + து எனப் பிரிக்கலாம்.

(ஹிம் - ஹிம்சையில் து - துய்க்கின்றவன்)

ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாய்க் கருதி அதை அகற்ற எவன் ஒருவன் பணிபுரிகிறானோ அவனே இந்து ஆவான். அப்பண்பு வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும்.

இக்கருத்தை

"ஹிம்ஸாயாம் தூயதே ய: ஸ: ஹிந்து:
இத்யபி தீயதே".

என்ற சுருதி வாக்கியத்தாலும் அறியலாம். இதிலிருந்தே இந்து மதம் என்பதற்கு அன்பு மதம் எனப்பொருள் கொள்ளலாம்.

"அகிம்ஸா பரமோதர்ம." மேலான அறம் எனப்படுவது அஹிம்ஸையே. அஹிம்ஸையாகிய அரும்பு அன்பாகிய மலராக மலர்கிறது. அன்பிற்கு அடிப்படை அஹிம்ஸையே ஆகும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகின்றான். எல்லா உயிர்ப் பிராணிகளுடைய உடம்பையே அவன் கோயிலாகக் கொண்டிருக்கிறான். ஆதலால், எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடத்து அன்பு செலுத்தினால் அன்புருவாய ஆண்டவனது அருள் பெறலாம்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

- இந்து மதம் என்பதற்கு "சநாதனதர்மம்" என வேறு ஒரு பெயர் கூறுவாரும் உளர். இதற்கு அழிவிலா அறம் என்பது பொருள். அன்றியும் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்பன போன்ற பல பெயர்களை இட்டு வழங்குவாரும் உளர்.
- மதத்தைச் சமயம் எனவும் கூறுவர். சமயம் என்பதற்கு 'சமை' என்பது பகுதி. உடம்பை வளர்ப்பதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப்படுத்துவது என்பது அதன் பொருளாகும்.
- சமயம் நமது கண்ணால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தால், அறியத் தகுந்த ஆன்மாவினையும், இறைவனையும் இனிது காட்டும் ஞானஒளி. மனிதனுடைய உடல்நலத்திற்கும் உள நலத்திற்கும் உதவும் அமுதம்.

- மனிதர் அன்போடு அளவளாவி வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கபீடம். மனிதர்களுடைய இகபர வாழ்விற்குரிய நலன்கள் அனைத்தையும் அருளும் கற்பக மரம்.

**இந்து மதப் பெருமைகள்:**

(அ) இந்து மதம் காலத்தால் மிகவும் முந்தியது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம்.

(ஆ) பிறமதங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து மதத்தில் அநாதியாகவே இடம் பெற்றுள்ளன. ஆதலால், உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாயக மதம் இந்து மதம் எனக் கொள்ளலாம்.

(இ) இந்து மதம் எந்த மதத்தையும் இழிவு படுத்தாமல் குஞ்சணைக்கும் தாய்போல் அணைத்து விளங்குகிறது. உலகில் உள்ள சில மதத்தினர் ‘‘தங்கள் மதத்தின் வழியாகவேதான் முக்தி அடைய முடியும்: வேறு மதங்களின் வழியாக முடியாது’’ எனக் கூறுகின்றனர். சிலர் தம் மதத்தைச் சராதவர்களைப் பாவிகள் என்றும், அஞ்ஞானிகள் என்றும் கூறுகின்றனர். ஒரு மரத்தில் ஏறிப்படர்ந்து தழைத்துப் பூத்த படர்கொடி அம்மரத்தினிடமே தன் சிறப்பைக் கூறுவதைப் போல இந்து மதத்தினிடமே அவை தற்பெருமை பேசுகின்றன. தூங்கும் சிங்கத்தின் மேலேறிக் குதிக்கும் சிறுபிராணிகள் போல இந்து மதமாகிய சிங்கத்தினிடம் வேறு சில மதங்கள் விளையாடுகின்றன. இவற்றை நமது இந்து மதம் தனது பெருந்தன்மையால் பொறுத்துக்கொண்டு இருக்கின்றது.

(ஈ) இந்து மதம் வெறும் நம்பிக்கையோடு, நின்றுவிடாமல் ஒவ்வொரு கொள்கையையும் ஆராய்ந்து, ஐயங்களை அகற்றி அறிவினைப் புகட்டுவது.

(உ) மனிதர்களைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்தோடு வாழச்செய்வது.

(ஊ) இல்லறத்தாரும், துறவறத்தாரும் முக்திபெறலாம் எனக் கூறுவது.

(எ) உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையும் இணைத்து மேற்செல்ல வழிகாட்டுவது.

(ஏ) ஆண், பெண், சிறுமியர், வாலிபர், வயோதிகர், உயர்ந்த வகுப்பினர், தாழ்ந்த வகுப்பினர் எனும் பேதமின்றி யாவரும் முக்திபெறலாம் எனக் கூறுவது.

(ஐ) முக்தி பெறுவதற்கு உரிய வழிகளை மக்களின் தகுதிக்கு ஏற்ப வகுத்து வழிகாட்டுவது.

(ஒ) மக்கள் செய்த நல்வினை, தீவினைகளுக்குத் தக்கவாறு மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி, மக்களின் இன்ப, துன்ப வாழ்வுக்குக் காரணம் அதுவே என்பதை விளக்குவது.

(ஓ) சில மதங்கள் விஞ்ஞானத்துக்கும் பொருத்தமற்ற கொள்கைகளை உடையவனாய் இருக்க, இந்து மதம் விஞ்ஞானத்தாலும் உணரமுடியாத மெய்ப்பொருள்களைத் தனது மெய்ஞானத்தால் இனிது இயம்புவது.

(ஔ) இவ்விதப் பெருமைகளை வேற்று நாட்டுப் பெருமக்களின் மாபெரும் கூட்டங்களில் சுவாமி விவேகானந்தர் போன்ற இந்து மத ஞானிகள் எடுத்தியம்பியுள்ளனர். அவற்றை கேட்ட பல மேல்நாட்டு அறிஞர்களும், 'பத்திரிக்கை ஆசிரியர்களும் இந்து மதத்தைப் பெருமைப்படுத்திப் பேசியும், எழுதியும் பாராட்டியுள்ளனர். சிலர் இந்துக்களாகி இனிது வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய இந்து மதப் பெருமைகளை நாம் இனிது நன்றாய் அறிவதோடு பிறநாட்டினருக்கும் இவற்றை விளக்கிக் கூறித் தக்க பணியாற்றுவது நமது இன்றியமையாத கடமையாகும்.

## 2. இந்து மத நூல்கள்

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்றுள்ளது. நமது இந்து மதத்திற்கு வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் இருக்கின்றன.

### வேதம்

- வேதம் என்ற சொல்லின் தாது அல்லது பகுதி 'வித்' என்பதாகும். வித் - அறிவு, வேதம் என்பதற்கு அறிவு நூல் என்பது பொருள்.
- தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர் பெற்றது.
- ஆசிரியனிடம் கேட்டுத் தெளிய வேண்டிய நூலாதலால் இதனைச் சுருதியெனவும் கூறுவர். இதனை இருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என நான்காக வியாசர் வகுத்துள்ளார்.

**இருக் வேதம்:**

- இருக் என்பதற்கு 'துதித்தல்' அல்லது 'வழிபடல்' என்பது பொருள். இறைவனைத் துதிப்பாடல்கள் பாடி வணங்குவதற்குரிய வழிகளை இதில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது.
- இது பத்து மண்டலங்களைக் கொண்டது. ஒன்று முதல் ஏழு மண்டலங்களில் இறைவனை அக்கினி என்ற பெயராலும், பத்தாவது மண்டலத்தில் பிரம்மன், இந்திரன் என்ற பெயர்களாலும் பாடப்பட்டுள்ளது.

**யஜுர் வேதம்:**

- 'யாஜ்' என்னும் பதத்துக்கு 'யாகம்' என்பது பொருள். யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளைச் செய்ய வேண்டிய முறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

- அமாவாசை, பௌர்ணமி காலங்களில் செய்ய வேண்டிய வேள்விகளைப் பற்றியும் பிதுர்கர்மம் முதலியன செய்ய வேண்டிய விதங்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. மிகச் சிறப்பு வாய்ந்த ருத்ரம் இதில் அமைந்துள்ளது.

**ஸாம வேதம்:**

- ஸாமம் என்னும் இன்னிசையால் பாடப்பெற்றது. இதில் பரமேசுவரனை அக்கினி, இந்திரன் முதலான பெயர்களால் பாடப் பெற்றிருக்கிறது.
- பாவத்தை நீக்கிப் பலனைக் கொடுக்கும் பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன. இசையுடன் இதனைப் பாடுவதால் பாபம் நீங்குகிறது.

**அதர்வணம்:**

இதில் மந்திரம் உச்சரிக்கவேண்டிய முறைகளையும், விரோதிகளின் அழிவின் பொருட்டுச் செய்யவேண்டிய கிரியா முறைகளைப் பற்றியும் கூறி இருப்பதோடு வேத சாரக்கிரியைகளையும் அனுஷ்டானங்களையும் பற்றிய தோத்திரங்களும் உள்ளன.

**உபநிஷதம்:**

- உபநிஷதம், நான்கு வேதப்பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை, பிராம்மாணம், ஆரணியகம் என்ற பாகங்களைச் சார்ந்தவை.
- 'உபநிஷத்' என்பதற்கு ஆசாரியன் அருகில் உட்கார்ந்து அறிந்துகொள்ளப்படும் ஞானம் என்று பொருள் கொள்ளுகிறார்கள். நூற்றெட்டு உபநிஷத்துகள் உள்ளன.

**அவற்றுள் மிக முக்கியமான உபநிஷத்துக்கள் பத்தாகும். அவை வருமாறு:**

- ஐத்ரேய உபநிஷத், தைத்திரிய உபநிஷத், கடோபநிஷத், சுவேதாசுவதர உபநிஷத், பிருஹதாரண்யகோபநிஷத், பிரச்னோபநிஷத், கேநோபநிஷத், ஈசோபநிஷத், முண்டகோபநிஷத், சாந்தோக்கிய உபநிசத்.
- இந்த பத்து உபநிஷதங்களுக்கும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பாஷ்யம் செய்துள்ளார். பின்னர் இராமானுஜர், வித்யாரணயர், ஆனந்த தீர்த்தர் முதலானவர்கள் பாஷ்யம் செய்துள்ளனர்.

## ஆகமம்

- ஆகமம் என்ற சொல்லை ஆ + கமம் எனப் பிரிக்கலாம்.
- ஆ = ஆன்மாக்களின் கமம் = பாசங்களை நீக்கம் செய்து முத்திப் பேற்றை அருளுவது. இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றினவென்று காரணாகமத்தால் அறிகிறோம்.
- சத்யோஜாத முகத்திலிருந்து காமிகம், யோகஜம், சிந்தியம், காராணம், அஜிதம் என்ற ஆகமங்கள் தோன்றின.
- வாமதேவ முகத்திலிருந்து தீப்தம், குஷ்மம், ஸகஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்ற ஆகமங்கள் தோன்றின.

- அகோர முகத்திலிருந்து விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநலம், வீரம் என்ற ஆகமங்கள் தோன்றின.
- தத்புருஷ முகத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்ற ஆகமங்கள் தோன்றின.
- ஈசான முகத்திலிருந்து ப்ரோத்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற ஆகமங்கள் தோன்றின.
- இவ்விருபத்தெட்டு ஆகமங்களுள் பத்து ஆகமங்கள் சிவ பேதங்களாகும். ஏனை பதினெட்டு ஆகமங்கள் ருத்ர பேதங்களாகும். இவ்வாகமங்களில் சரியாபாதத்தில் பூஜைக்குரிய பொருள்களைச் சேகரித்தலும், பூஜை முறைகளும் கூறப்பட்டுள்ளன.
- கிரியாபாதத்தில் கர்ஷணம் (உழுதல்) முதல் பிரதிஷ்டைவரையில் உள்ள கிரியைகளும், நித்திய நைமித்திக பூஜைகளும் திருவிழா முறைகளும், சமய, விசேஷ, நிர்வாண தீட்சை விதிகளும் கூறப்பட்டுள்ளன.
- யோகபாதத்தில் ஆன்ம சுத்தி, அந்தர் யாகம் முதலியனவும், ஞானபாதத்தில் பதி, பசு, பாச இலக்கணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் ஆகமங்களில் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் எனும் தசகாரியங்களது இலக்கணங்களும் உரைக்கப்பட்டிருக்கின்றன.

### வைணவாகமங்கள்

- ஸ்ரீமந் நாராயணனாகிய விஷ்ணுவை பரதேவதையாகக் கூறும் ஆகமங்கள் வைணவாகமங்களாகும். வைணவாகமங்கள் பாஞ்சராத்ராகமம் எனவும், வைகானஸாகமம் எனவும் இருவகைப்படும்.
- பாஞ்சராத்ராகமம் பலரிஷிகளின் மூலமாகவும், வைகானஸாகமம் விகனஸர் என்ற மகரிஷிகளின் மூலமாகவும் உபதேசிக்கப்பட்டன. இவ்விரு ஆகமங்களுக்கும் அதிக பேதமில்லை. ஆனால், ஆலய பூஜாவிதிகளிலும், தினசரியைகளிலும் சிறிது பேதமுண்டு.
- பாஞ்சாராத்ரஸம் ஹிதைகளின் படி மேலக்கோட்டை என்கிற திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் என்ற மூன்று ஆலயங்களிலும் பூஜை முதலியன நடைபெற்று வருகின்றன.
- திருப்பதி கோவில் வைகானஸ ஆகமத்தை ஒட்டி நடந்துவருகின்றது. ஒரு யாகத்தின் இடையில் ஐந்து இரவுகளில் பகவானால் உபதேசிக்கப்பட்டதால் பாஞ்சராத்ரம் எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர்.
- இவ்வாகமத்தில் பஞ்ச பூதங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், அஹங்காரம், புத்தி, அவ்வியக்தம் என ஐந்து பாகங்கள் விளக்கப்பட்டுள்ளன.
- இப்பஞ்சராத்ராகமங்களில் தேவாலயங்களுக்கென்று ஏற்பட்ட தலங்கள், தேவாலய நிர்மாணங்கள், விக்கிரகப் பிரதிஷ்டாக் கிரமங்கள், பூஜாகாலங்கள், பூஜாதிரவியங்கள், உத்ஸவாதிகள், ஸம்ப்ரோட்சணாதிபதிகள், பூஜை செய்பவர்களின் யோக்கிய தாம்சங்கள், அவர்களுக்கு ஏற்பட்ட தீட்சை முதலியவைகள் விளக்கப்பட்டுள்ளன.